
# இதயத்தின் சிலிர்ப்புகள்



மகிழினி காந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ. சப்னா

# இதயத்தின் சிலிர்ப்புகள்

(தத்துவங்கள் 200)

## மகிழினி காந்தன்

காகிதம் பதிப்பகம்
மாற்றுத்திறனாளிகள் நடத்துகிற பதிப்பகம்
13-B, TYPE-2 குடியிருப்பு, வட்டம்-4,
நெய்வேலி-607801, கடலூர் மாவட்டம்
கைப்பேசி 8903279618 - kaakitham@gmail.com
www.kaakithampublications.blogspot.in

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| முதற் பதிப்பு | : | **மார்ச் 2017** |
| நூற் பெயர் | : | **இதயத்தின் சிலிர்ப்புகள்...!** |
| பொருள் | : | **தத்துவங்கள்** |
| உரிமை | : | **ஆசிரியைக்கு** |
| ஆசிரியர் | : | **மகிழினி காந்தன்** |
| படிப்பு | : | **M.A., B.Ed.,** |
| பணி | : | **தமிழாசிரியை** |
| முகவரி | : | **Roschistrasse 1A,**<br>**3007 Bern,**<br>**Switzerland** |
| தொடர்பு | : | கைப்பேசி/வாட்ஸப் : 0789606894<br>மின்னஞ்சல்: mahilinikaanthan@yahoo.de |
| நூலின் அளவு | : | 17 x 12 **செ.மீ** |
| பக்கங்கள் | : | 66 |
| அச்செழுத்து | : | 14 **புள்ளிகள்** (SUNDARAM-0823) |
| வெளியீடு, அச்சு & வடிவமைப்பு | : | **காகிதம் பதிப்பகம்** |
| முகவரி | : | 13-B, **TYPE** - 2, வட்டம் - 4,<br>நெய்வேலி - 607801,<br>கடலூர் மாவட்டம் |
| தொடர்பு | : | கைப்பேசி/வாட்ஸப் : **8903279618**<br>மின்னஞ்சல் : **kaakitham@gmail.com**<br>**www.facebook.com/kaakitham**<br>**www.kaakithampublications.blogspot.in** |
| விலை | : | ரூ.65 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடரில் ஒளிரும் மனிதம்



ஒளி தற்காலிகமானது, இருள் நிரந்தரமானது. இருளோடு போராடுவதே வாழ்வின் முக்கியப் பணியாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது. இந்தப் போராட்டக் குணம்தான் மனித வாழ்வினை வெளிச்சமாகவே வைத்திருக்கிறது.

சோர்ந்து போகும் ஒவ்வொரு மனிதனுக்கும் தன்னம்பிக்கை தேவைப்படுகிறது. அந்த நன்னம்பிக்கையில் கொஞ்சம் கவித்துவம் தூவி இன்முகத்தோடு அளித்திருக்கிறார் கவிஞர் மகிழினி காந்தன்.

ஒவ்வொரு எழுத்தாளரிலும் மற்றும் கதை மாந்தரிலும் நான் என்னைப் பொருத்திப் பார்ப்பது ஒரு பழக்கமாகிவிட்டது. படைப்புத் தளத்தின் இந்தச் சூழலில் ஒரு படைப்பாளியாக நான் என்ன செய்திருப்பேன்...? என்கிற சுய பரிசோதனை அது.

இந்தத் தொகுப்பின் அனேக இடங்களில் நூலாசிரியர் என் கருத்துகளோடு ஒன்றிப் போகிறார் என்பதில் தனிப்பட்ட மகிழ்ச்சியும் நிறைவும் எனக்குக் கிடைத்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் கருத்துச் சிதறல்களை தினம் ஒன்றாக வாசித்து வந்தாலே போதும். நற்குணங்கள் மேலோங்க இது நல்ல முறையில் பயனளிக்கும். "இளமையில் கல்" என்றாள் ஔவை மூதாட்டி.

"சதி கொல்!
சாதித்து வெல்!"

என்று இயல்புக்கு இன்னும் கொஞ்சம் வீரியம் சேர்த்து விளாசுகிறார் இந்த நவீன ஔவையார்.

"ஒரு உண்மை சொல்லிவிட்டு
உங்கள் முகத்தை
கண்ணாடியில் பாருங்கள்
இதயம் தெரியும்"

இது கவிதையில்லாமல் வேறென்ன...?

நல்ல கவிதைகளைத்தான் இலக்கிய உலகம் தேடிக் கொண்டேயிருக்கிறது... இன்னும் நிறைவடையவில்லை.

இந்த நிறைவற்ற தன்மையே கவிதையின் உண்மையான குணம். அதுதான் வாசகர்களை மேய்ச்சல் நிலம் தேடி அலையச் சொல்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அகத்தின் அழகு
புறத்தில் தெரிவதில்லை"

என்கிறார் நூலாசிரியர். நம்மால் மறுக்க முடியவில்லை. பக்கத்து வீட்டில் வசித்த ஒரு காமுகன்தான் ஆறு வயதுச் சிறுமியை பாலியல் இச்சைக்காகக் கொலை செய்திருக்கிறான். இவன் அகம் மற்றவரின் புறப் பார்வையில் தெரிந்திருந்தால், அந்தச் சிறுமியைக் காப்பாற்றியிருக்கலாம்.

"படித்துக் கொண்டிருக்கிறேன்
சுவாரசியம் மிகுந்த நாவலொன்று
முடிக்கும் போது
நான் இருக்கப்போவதில்லை."

மேற்கண்ட வரிகளில் ஒரு நவீனக் கவிதையின் சாயல் தென்படுகிறது. பல்வேறு சுவாரசியங்கள் மிகுந்தது மனித வாழ்க்கை. உண்மையில் இந்தத் தத்துவத்தில் நாவலென்பது மனித வாழ்வின் குறியீடு. தன் வாழ்வினை தானே வாசிக்கும் வாசகராக இருக்கிறார் நூலாசிரியர். இதுபோல் பல இடங்களில் நம்மை வியக்கவும் வைத்திருக்கிறார். நமது சங்க இலக்கிய அற நூல்களும் பக்தி இலக்கியங்களும் கூறும் பெரும் தத்துவங்களின் ரத்தினச் சுருக்கத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்காலத்திற்குத் தகுந்ததுபோல் எளிய முறையில் சொல்லியிருக்கிறார் கவிஞர் மகிழினி காந்தன்.

ஒவ்வொரு தத்துவத்தையும் வாசித்த பிறகு நீங்கள் அனுபவத்தில் சந்தித்த ஒரு நபரையோ அல்லது வாழ்வின் ஒரு நிகழ்வையோ உங்கள் கண் முன் நிறுத்துமென நம்புகிறேன்.

தூசி படிந்திருக்கும் மூளையின் மேற்பரப்பை சுத்தம் செய்கின்றன இவரது படைப்புகள். வெறுமனே ஓய்வெடுக்கும் சோம்பலான தன்மையினைப் போக்கி சிந்தனைகளின் ஊற்றைப் பெருக்கி வாசகர்களை செயலில் மேம்படவும் வைக்கின்றன.

ஒரு நூலின் அணிந்துரை என்பது ராஜ கோபுரத்தின் வெளிக்கதவுகள். உங்கள் வேகத்தை சற்றே குறையுங்கள். இந்த இடத்தில் கொஞ்சம் நில்லுங்கள். உள்ளும் புறமுமான பரிசுத்தத்தை உறுதிபடுத்திக் கொள்ளுங்கள். இங்கிருந்து ரசிக்கத் துவங்குங்கள்.

ஒரு முழு ஆலய வழிபாட்டுக்குத் தயாரானபின் உங்கள் பாதங்களை கதவுகளுக்கு அப்பால் நடத்துங்கள். சிற்பங்களைச் சிதைக்காதீர்கள். கலையின் முகங்களைச் சந்தியுங்கள். படைப்பாளியை மனதுக்குள் பாராட்டுங்கள். எப்படி நுழைந்திருந்தாலும் மனம் இளகியே திரும்புங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வான்மழை
வாழ்த்தையோ
விமர்சனங்களையோ
எதிர்பார்ப்பதில்லை"

என்ற மகிழினியின் வரிகளுடனே உங்கள் வாசிப்பிற்கு வழிவிட்டு நான் விடைபெறுகிறேன். விமர்சனங்களின் புகழுரைகளுக்கு மதி மயங்காமல் எதிர்வாதிகளின் கண்டனங்களுக்கு செவி மடுக்காமல் தன் முழு சுயத்தோடு மகிழினி தொடர்ந்து இயங்குவார் என அவதானிக்கிறேன்.

அவர் இதயம் ஆரோக்கியமாய் துடிக்கட்டும் அவ்வப்போது சிலிர்க்கட்டும்.

நட்புடன்,
யாழிசை மணிவண்ணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

தமிழாசிரியை மகிழினி காந்தன் அவர்கள் "இதயத்தின் சிலிர்ப்புகள்" என்னும் தத்துவ நூலைப் பதிப்பிக்கும் வாய்ப்பை எங்களுக்கு வழங்கியமைக்கு மனநிறைவடைகிறோம்.

நூல் உருவாக்கப் பணிகளான தட்டச்சு, உள்பக்க ஒருங்கிணைப்பு, அட்டைப் பட வடிவமைப்பு ஆகியவற்றில் நாங்கள் ஈடுபட, அப்பணிகளுள் முக்கியமானதாகக் கருதப்படும் பிழை சரிபார்த்தல் பணியை ஆசிரியை மேற்கொண்டமை, எங்களுக்குப் பேராதரவாகவும், நூலைச் செம்மைப்படுத்தவும் அமைந்தது. ஒரு எழுத்தாளர், பதிப்பகத்தாருடன் எப்படி அணுக வேண்டும் என்பதற்கு இவர் சான்று. இயல்பாக அணுகி, நிலைமைக்கேற்ப பொறுமையாக ஒத்துழைத்து, சுமுகமாகப் பணிகள் நிறைவேற, எங்களுக்குப் பெரிதும் உறுதுணையாக இருந்தார்.

"இதயத்தின் சிலிர்ப்புகள்"-இல் உள்ள தத்துவங்கள் 200, வாசகர்களின் இதயங்களில் பலவித முன்னேற்றச் சிந்தனைத் துடிப்புகளை ஏற்படுத்தப்போகும் சதவீதம் 100.

தமிழாசிரியை மகிழினி காந்தன் அவர்களின் எழுத்துக்கள், புத்தகங்களாய் எழுந்து நிற்க, மாற்றுத்திறனாளிகள் நடத்துகிற "காகிதம் பதிப்பகம்" என்றும் துணை நிற்கும்.

நட்புடன்,
மனோபாரதி,
காகிதம் பதிப்பாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

ஒவ்வொரு மனிதர் உள்ளத்திலும் ஒவ்வொரு நாளும் ஏற்படும் அனுபவங்களின் சுற்றிவளைப்பால், சில சிந்தனைகள் சிறகடித்தே எழும்பும்.


சீர்படுத்தி எழுத்துகளால் அணிசெய்து கோத்து இருக்கிறேன். ஒவ்வொன்றும் என் பட்டறிவின் சிலிர்ப்புகளே.உள்ளதையும் உள்ளத்தையும் உலாவ விட்டு உங்களை என்னோடு அழைத்துச் செல்கிறேன். சமூகத்தின் போக்கில் நடந்து என் மனதுக்கும் அறிவுக்கும் சரியென்று பட்டதனை பட்டென்று சொல்லி தவறென்று கண்டதை சுற்றுக் காட்டமாகவே கூறியிருக்கிறேனோ தெரியவில்லை! வாசிக்கும் வாசகராகிய உங்கள் கருத்துக்கள் இதன் விடையாகும்.

நம் சிந்தனகளை நாமே எழுதுவது சிறப்பு என்று ஊக்கம் தந்து எழுதத் தூண்டிய இலண்டன் தமிழ் வானலை திரு நடா மோகன் அவர்களை நினைவு கூராமல் இருக்க முடியாது. ஆக்கங்களைப் படித்து அணிந்துரையை அற்புதமாய் அளித்த திரு.யாழிசை மணிவண்ணன் அவர்களுக்கு இதய நன்றி!

எண்ணம் போல் நூலை ஆக்கித் தந்த காகிதம் பதிப்பகத்தாரின் சேவைக்கும் மிக்க நன்றி! வாசிக்கப்போகும் அன்புநிறை உள்ளங்கள் ஒவ்வொருவருக்கும் உளநன்றி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் உணர்வை ஏற்படுத்தி, தமிழ் படிக்க வைத்து, தமிழில் பெரும் புலமை பெற்று எழுத்தாளராக ஒளிர வேண்டும் என்பது என் தந்தை திரு நா.குணநாயகம் அவர்களின் பேரவா. அவர் உயிருடன் இருக்கும் போது நிறைவேறா அவராசை இழந்த பின்னாவது அவராசியுடன் இனிதே ஆகியது. இந்நூல் என் தந்தைக்கே காணிக்கையாக்கி மகிழ்கிறேன்!



01.03.2017

சுவிட்சர்லாந்து

இதயச் சிலிர்ப்புடன்,

*மகிழினி காந்தன்*

Email: mahilinikaanthan@yahoo.de

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1. சாத்தியமே

எட்டாத நிலவென்று எண்ணாதீர்
எட்டாமலா கால் பதித்து வந்தார்
நம்மால் இன்று முடியாது போகலாம்
நாளை சாத்தியமே ஆகலாம்!

## 2. கொடை

பொருள் கொடுத்தாற்றான்
கொடையா?
மனதைக் கொடுத்தாலும்
கொடைதான்!

## 3. பலவீனம்

நாம் பிறர்க்குச் செய்ய
நினைக்காத ஒன்றை
பிறர் நமக்குச் செய்வாரென
எதிர் பார்ப்பது பலவீனம்!

## 4. வாய் மட்டும்தான்

எல்லாமே குறுகிவிட்ட காலத்தில்
இன்னும் நீளமாய்
இருப்பது வாய் மட்டும்தான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5.பாடுகள்

பார்வையாளனாய்
பல கருத்தும் கூறமுடிகிறது
பங்கேற்றவருக்கே
பாடுகள் புரிகின்றன!

## 6.தீராது

எல்லாக்கெட்ட செயல்களையும்
வெட்கமில்லாமல் செய்து கொண்டே
பரிகாரங்களாய்ப் பண உதவிகள் செய்யும்
பாவப்பட்டோரின் பாவங்கள்
தீரவே தீராது!

## 7.சாபங்கள்

நல்லோரின் சாபங்கள் பலிக்கக்கூடும்
எனினும் நல்லோர் சாபமிடத்துணியார்!

## 8.மனநிலைப் பாதிப்பு

நன்கு தெரிந்தால் மட்டுமே
உறுதியாய்ப்பேச வேண்டும்
ஊ(யூ)கத்தில் நிதானமிழந்து
பழி போடுவதெல்லாம்
மனநிலைப் பாதிப்பின் செயல்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9.வாழ்த்தலாம்

எல்லார்க்கும் பெரியோனாம்
எல்லாம் வல்ல இறைவனையும்
வாழ்த்துகிறோம் வணங்குகிறோம்
மனிதனை வாழ்த்த வயதெதற்கு!
வாழ்த்தலாம்!

## 10.மூழ்குதல்

நம் கருத்துகள் எதைச் சுற்றிச் சுற்றி
நர்த்தனிக்கிறதோ
அதற்குள் மூழ்கிக் கொண்டு இருக்கிறோம்
அல்லது மூழ்கத் துடிக்கின்றோம்
என்றே பொருள்!

## 11.தவறு

நான் அழகின்றி இருக்கலாம்
அது என் தவறல்ல
ஆனால் அறிவின்றி இருந்தால்
அது என் தவறே!

## 12.கற்பனை

நம்மையே தாழ்வாய் நினைத்தபடி
உயரத்தை எட்டுதல்
கற்பனை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13.பழகாமை

முடியக்கூடிய செயல்
முடியாமைக்கு காரணம்
பழகாமை!

## 14.காரணம் புரியும்

கூறிய வார்த்தைகள்
சரியானவை தானா?
என்று ஆராய்ந்தால் போதும்!
எதிர்த்தரப்பு வார்த்தை அம்பின்
கூர்மையின் தாக்கத்துக்கான
காரணம் புரியும்!
கல்லை எறிந்து விட்டு
பூவை எதிர் பார்க்கலாமோ?

## 15.பேசாதிருப்போம்

ஒருவரைப் பற்றிச் சரியாக
அறிந்து கொள்ளாமல்
நீர் என்ன செய்து கிழித்தீர்?
என்று எகத்தாளமாய்ப்
பேசாதிருப்போம்!
பெரிய காரியங்களைச் செய்துவிட்டு
அமைதியாக அவர்கள் இருக்கக் கூடும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 16.விச விதை

கெட்ட மனதுடன்
பிடித்தமாதிரி வாழ நினைத்தால்
நீங்கள் ஒரு விச விதை!

## 17.கோலமாகும்

கோடுகள் வளைந்து
கோலங்களாகின்றன!
வளைந்து கொடுப்பதனால்
வாழ்க்கையும் கோலமாகும்!

## 18.கல்

பொறாமையைக் கொல்!
பொறுமையைக் கல்!

## 19.கேட்காமல்

கோழைகளும் வீறாப்பாய்ப்
பேசுவார்கள்
யார்க்கும் கேட்காமல்!

## 20.பிழைக்கலாம்

சிறிது அறிவு
நிறையப் புத்திசாலித்தனம் போதும்
உள்ளூரிலேயே பிழைத்துக் கொள்ளலாம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உ1.முதன்மை

இயலாதென்பதெல்லாம்
கற்பனையாக்கிக்
கனவில் வாழ்வதை விட
இயலுமானதிற்கு
முதன்மை கொடுத்து
நனவில் வாழ்தல்
நன்மை தரும்!

## உஉ.புதிதாக்கு

பிறப்பு என்பது
பூமியில் வந்து
பூத்ததாய் எண்ணினால்
அது மேலோட்டம்!
ஒவ்வொரு துன்பத்தையும்
ஒருவாறு கடந்து மீளும்போது
ஒரு புது மனிதர் ஆகிறோம்!
பலமுறை பிறந்து
புதிதாக்கு மனதினை!

## உ3.பரிசு

நீங்கள் மேளங்கொட்டி
பெரிய பரிசுப் பொதிகளோடு
வாழ்த்தி விடுகிறீர்கள்!
நானோ புன்னகையோடு
பூவொன்றை நீட்டி விடுகிறேன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 24.தவறல்லவோ

கோபத்தில்
திருப்பி வாங்கக் கூடிய
பொருட்களைப் போட்டு
உடைக்கலாம் தவறில்லை!
வாங்க முடியாத
அன்பைப் போட்டு
உடைக்கலாமோ
தவறல்லவோ!

## 25.கல்வி

பாடசாலை சென்று
படித்தால்தான்
கற்றவர் என்பதல்ல
உலகில் கல்லாதார் யாருமிலர்!
வாழ்க்கையின் ஒவ்வோர் அனுபவமும்
அதன் பாடமும் கல்விதான்!

## 26.விளக்கங்கள்

சில புரிதலின் பின்
பார்க்கும் பார்வையில்
அதிசயிக்க வைக்கும்
பொருள் விளக்கங்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 27.சுவாரசியம்

இன்பம் துன்பம்
இவை மாறி மாறி வந்து
வாழ்வை சுவாரசியமாக்குகின்றன!

## 28.கையேந்தல்

சொந்தக்காலில் நின்று
சோர்வின்றி உழைத்து
சேமிப்பும் கொண்டால்
இப்போதும் எப்போதும்
இல்லையே கையேந்தல்!

## 29.சக்தி

அன்பு என்கின்ற
அழகான மந்திரக்கோல் மட்டுமே
அனைவரையும் குழந்தையாக்கும்
சக்தி கொண்டது!

## 30.திரும்புங்கள்

தீயவைகளிலிருந்து வெட்கப்பட்டு
திரும்புங்கள்!
இல்லையேல்
நல்லவற்றை நாட முடியாமல்
நடுங்கக் கூடும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31.சுய அறிவில்

ஒரு விடயத்தை
ஒவ்வொருவரும்
ஒவ்வொருமாதிரி
விளக்கிட முனைகையில்
விழி பிதுங்கித்தான்
வெளிவர முயல்கிறது!
சுய அறிவில் சிந்தித்தால் போதும்
சாதிக்க வழி கிடைக்கும்!

## 32.கிடையாது

அன்பானவர் கரங்களில்
வன்மையான ஆயுதங்கள்
சிக்கிக் கொண்டாலும்
சீரழிவு கிடையாது!

## 33.பொழுது போக்காய்

கெடுதல் செய்வதே பொழுது போக்காய்
கொண்டவர்க்கு
கெடுதலும் ஒருநாள்
பொழுது போக்காய் வரும்!

## 34.வலி

பிரிவுகள்
வலிப்பதோடு
பலத்தையும் தரும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 35. தியானம்

பிறரைப் பற்றிய
சரியான தெளிவு இல்லாமல்
எதையும் பேசி
நாவைத் தீட்டுப்படுத்தல்
நலம் தராது!
அவ்வாறு பேசுதற்கு
அகம்பாவமும் பொறாமையும்
வெறுப்புமே காரணம்!
இவற்றை வெல்ல
தியானம் செய்வோம்!

## 36. விருப்பம்

அன்பும்
மன வலிமையும்
உடல் வலிமையும்
சிக்கல்களை ஆளும் திறமையும்
உடைய ஆணைத்தான்
பெண் விரும்புவாளே ஒழிய
அடக்கி ஆளுங் குணமுடையவரை
ஒருபோதும் விரும்பாள்!

## 37. புரியும்

எதிர்மறை இருந்தால் தான்
நேர்மறையின் மகத்துவம்
புரியும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 38.வேடிக்கை

மரணம் நிகழா மர்ம வீடுண்டா?
நமக்கு மரணபயம்
வரும்வரைதான்
வேடிக்கை!
வந்தபின் தத்துவங்கள்
தானாய் எழுவதும்
வாடிக்கை!

## 39.ஆழ்தல்

மிக ஆழத்தில்
விதை புதைத்தேன்
எழ முடியாமலே
அழுகிப் போனது
ஆழ்தல் நல்லதுதான்
மிக ஆழ்தல் கூடாது!

## 40.வெல்

சதி கொல்!
சாதித்து வெல்!

## 41.வீரம்

அடக்குவதுதான் வீரமெனில்
கோபத்தை அடக்குவோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 42.நலம்

நல்லதையே நினைத்து
நல்லதையே செய்து
கொண்டிருப்பவருக்கு
உளம் எப்போதும்
நலமாகத்தானே இருக்கும்!

## 43.வெறுப்பு

உண்மையில் வெறுப்பது
மனிதரின் சில குணங்களையே தவிர
முழு மனிதரை அல்ல!

## 44.புரளி

தடையின்றி
தயக்கமின்றி
தான் நினைத்தபடி
செய்ய வேண்டுமென்றால்
அதைப் புனிதமென்று
புரளியைக் கிளப்பிவிட்டு
புனிதனாகிறான் மனிதன்!

## 45.அழகு

இப்போதெல்லாம்
அகத்தின் அழகு
புறத்தில் தெரிவதில்லை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 46.தேடுகிறது

தொடர்கின்ற நச்சரிப்புகளால்
எரிச்சலூட்டும் உணர்வு நரம்புகளை
அறுத்தெறிந்துவிட்டு
ஆறுதலடையும் மனசொன்றை
ஆவலாய்த்தேடுகிறது மூளை!

## 47.முயற்சி

இல்லம் இப்படி
இருக்க வேண்டுமென்றே
இணைத்து இழுத்த
கோடுகளால்
அழகாகிக் கொண்டிருந்த
நிழல் வீடு
நிஜமாகியிருந்தது
நிற்காத முயற்சியின்
பிரதி பலனாக!

## 48.பிரபலம்

பிரபலம் ஆனதெல்லாம்
பிறர் பலத்தால் என்பதை
மறந்திடும் நாளில்
மரத்திடும் நாளம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 49.இருக்காது

பெண்களை மதிக்காத
பெருமித மனிதனாய்
வாழ்ந்து இறந்தால்
கண்ணீர் கசியும் கண்கள்
இருக்காது!

## 50.மறைந்து கொள்

காமம் விஸ்வரூபமெடுத்து
உன்னைத்தேடுகையில்
மறைந்து கொள்!
சிக்கினால் சிதிலமாவது
இன்னோர் உயிர் என்பதை
மறக்கவொண்ணாதே!

## 51.வலி பூவாகும்

தவறுகண்ட போதினில்
தாங்கவொணாது துடித்து
தட்டிக்கேட்கும் மனது
தாங்கிக் கொள்ளும்
தரங்கெட்ட வார்த்தைகளை,
தவறு நீங்கினால் போதும்
தாங்கும் வலி பூவாகும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 52.களை

கண்ணுக்குப் புலப்படாக்
கடவுளின் உருவத்தையும்
கல்லில் வடிப்பது
எல்லையில்லாக்கலை!

## 53.சுவாரசியம்

படித்துக்கொண்டிருக்கிறேன்
சுவாரசியம் நிறைந்த நாவலொன்று
முடிக்கும் போது
நான் இருக்கப்போவதில்லை!

## 54.அலட்சியம்

தன்னுடையதென்றால்
அது பொக்கிஷம்
அடுத்தவருடையது என்றால்
அலட்சியம்!

## 55.பகைமை

பகைமை கொண்டு
வாழும் உள்ளம்
தகைமை கண்டு
வாழ்த்துவதில்லை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 56.ஈகோ

ஈகோ கொஞ்சம் தேவைதான்
இல்லையெனில்
ஈ மொய்க்கும்படி ஆகிவிடும்!

## 57.நா நயம்

நாணயம் இல்லாதவரின்
நா நயம்
நயப்புடைத்தன்று!

## 58.ஞானி

தேடலை
பெண்ணுக்குள் வைத்துவிட்டு
ஞானியாக முயற்சிக்கிறேன்
என்கிறீர்கள்!

## 59.நலம்

நெகிழியால் நேர்வது
நெகிழாமை நெருடுதல்
நெருப்பில் உருகினாலும்
நிலத்துக்கு கெடுதல்
நீண்ட வெறுப்பில்
நையாததை உருவாக்க
நாடாதிருத்தல் நலம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 60.வலி தெரிவதில்லை

அன்புக் கடலில்
மூழ்கியிருக்கையில்
துன்பங்கள்
உரசிச் சென்றாலும்
வலி தெரிவதில்லை!

## 61.நம்பிக்கை

காரணத்தோடு
சொல்லப்படுபவையே
நம்பிக்கை தரும்
மறைக்கப்பட்டவை
மூடநம்பிக்கைக்குள்
மூடப்படும்!

## 62.தூங்க வை

துயரமெனும்
பூவுடலைத்தாங்கி
பறக்க வைக்கவே
தன்னம்பிக்கைச் சிறகுகள்!
அதையகற்றிவிடும்
எண்ணத்தை ஏன் எழுப்புகிறாய்?
தூங்க வை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 63.அழகு

தகாததைச் செய்துவிட்டோமே
என வெட்கும்போது
மனிதரே அழகு!

## 64.பாடம்

பாடம் என்பது
சொந்த அனுபவம்
சொல்லுவது மட்டுமல்ல
சொந்தக்காரரின்
அனுபவமும் சேர்ந்ததே!

## 65.முரண்

துணிந்து ஆண் பேசினால்
வீரம் என்கிறார்கள்
துணிந்து பெண் பேசினால்
திமிர் என்கிறார்கள்
முரண்!

## 66.உருவாக்கும்

ஆதிக்கவெறி
அடிமையை உருவாக்கும்
அன்பு நெறி
அம்மாவை உருவாக்கும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 67.நாணல்

மகிழ்வும் கவலையும்
மாற்றி மாற்றி
சுமக்கும் இதயம்
இரும்பல்ல நாணல்!

## 68.சிறப்பு

திறமையைப்
பாராட்டியபின்
குறை களைதல்
சிறப்பு!

## 69.வாழ்க்கை

விருப்பைச் சுகித்து
வெறுப்பை உமிழ்வதே
வாழ்க்கை!

## 70.நடைமுறை

தெரியாதோர் உயர்வினை விட
தெரிந்தவர் உயர்வைக்
கண்டு பொறாமையுறலே
அதிகம் நடைமுறை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 71.இந்தக்காலம்

மண்ணைப்பார்த்து
மெல்ல அதிராமல்
நடக்கும் பெண்கள்
அது அந்தக்காலம்!
விண்ணில்
விண்ணுந்து விமானியாய்
பாதுகாப்பெல்லையில்
இராணுவ வீராங்கனையாய்
மண்ணில் நிமிர்ந்த நடையுடன்
மதிபெற்ற மங்கையாய்
நடக்கும் பெண்கள்
இது இந்தக்காலம்!

## 72.தேடி

உயிரும் மெய்யும் சேர்ந்துதான்
வாழ்க்கை என்பதைப் புரியாமல்
வாழ்க்கையை மட்டும்
தேடி அலைகின்றனர்!

## 73.குறை

வேண்டுமென்றே
குறை காண்பவர்க்கெல்லாம்
விளக்கம் சொல்லி
நேரத்தை வீணாக்கத் தேவையில்லை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 74.முயற்சிப்போம்

எல்லாரது வாழ்வும்
இறுதியில் கல்லறைக்குத்தான்
போகும் எனினும்
இடையில் கோபுரங்களில்
அமர்ந்துவிட்டு செல்ல
முயற்சிப்போம்!

## 75.அன்பு

அன்போடு பாருங்களேன்!
அத்தனையும்
அழகாய்த்தான் தெரியும்!

## 76.கொட்டுவோம்!

வீரத்தை காட்டுவதென்றால்
உண்மை நேர்மை தன்னம்பிக்கை விடாமுயற்சி
போன்றவற்றில் காட்டுவோம்
உயிர்கள் மீது அன்பைக் கொட்டுவோம்!

## 77.தாக்கம்

விழுந்து விட்டோம் என்ற
உணர்வின் தாக்கமும்
எழுந்து கொள்வோம் என்ற
அறிவின் தாக்கமும்
உள்ளவனே மனிதன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 78.உயர்வீர்கள்!

எல்லாரும் எனக்குக் கீழ்
என்ற நினைப்பே
மதிப்புத்தர முடியாமைக்கு மூலம்!
சமம் என்ற நினைப்பில்
நீங்கள் உயர்வீர்கள்!

## 79.ஒழியும்

பகையை பணம் கொடுத்தெல்லாம்
ஒழிக்க இயலாது
நல்ல மனம் கொடுத்தாலே
ஒழியும்!

## 80.அழகு

அழகு என்பது
அவரவர் உணர்வதைப் பொறுத்தது!
நம் முகத் தோற்றத்துக்கு
நாம் காரணமல்ல!
நம் பரம்பரை அலகுதான் மூலம்!
நாம் கேட்டு வாங்கியதா அது!
யாரையும் அழகில்லை
என்று இழிவாக நையாண்டி செய்யாதீர்!
உங்கள் மன அழகின்
வெளிப்பாடே அது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 81.பிசைந்தபடி

திறமைதான் உயரவைக்கின்றதுஎன்றால்
எத்தனை திறமையானவர்
உயரத்தைப் பார்க்கமுடியால்
இன்னும் உணர்வுகளைப்
பிசைந்தபடி !

## 82.இயல்பாய்

இன்று மட்டும்
மகிழ்ச்சியாய் இருப்பதை விட
எப்போதுமே இயல்பாய்
இருப்பதே நன்று!

## 83.முரண்

நன்மை செய்ய நினைக்கும்
மேன்மைக் கூட்டத்தை
அல்லல் தரும் அடியாட்களோடு
இல்லம் புகுந்து
இளக்காரமாய்ப் பேசி
கல்லால் எறிந்து
காயம் செய்தவன்
கையில் வைத்திருந்தான்
கடவுளின் வழிகாட்டும்
அடக்கமான புத்தகம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 84.மாயை

சிலருக்கு அற்புதமாய்த்
தெரிவது சிலருக்கு
அற்பமாய்த்தெரியும்!
ஆகவே
அற்புதமும் அற்பமும்
மாயை!

## 85.தேடல்

தேடி வந்த முகவரி
கூடி வராத தெருக்களில்
நின்று அங்கலாய்த்தவனை
அனாயாசமாய்க் கடந்தான்
பார்வையற்றவன்!

## 86.பார்வை

தோட்டத்தில்
தொங்கிக் கொண்டிருந்த
இளம்பச்சை நிறப் புடலங்காய்களை
கூட்டாய்ச் சேர்த்து
தோளில் போட்டு நடந்தேன்!
ஊரார் கண்ணுக்கு
எல்லாம் பாம்பாய்த் தெரிந்தன!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 87.எது வரும்

ஒரு கல்லை வீசினால்
பதிலுக்கு பூவா வரும்
புயல்தான் வரும்!

## 88.வாய் மட்டும்தான்

கோழைக்கு
வாய் மட்டும்தான் காதுவரை
செயலில் காலே இல்லை!

## 89.புசிக்கக் கூடியவை

கற்பனைகள்
ரசிக்கக் கூடியவை
நடை முறைகளே
புசிக்கக் கூடியவை!

## 90.குறை

ஒன்றைப்பற்றி
முழுமையாய்
ஆராய்ந்த பின்
குறை சொல்ல
ஆரம்பிக்கலாம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 91.விளைச்சல்

நல்விதையேயாயினும்
விழும் இடத்தைப்பொறுத்தே
வளர்ச்சியும் விளைச்சலும்!

## 92.தீர்வு

தெரியாமல் செய்திருக்கக் கூடும்
தவறை ஒத்துக் கொண்டாலே போதும்
ஒரு சிக்கலுக்கு தீர்வு கிடைத்துவிடும்.

## 93.கொல்

அம்பால் கொல்லாதே
அன்பால் கொல்!

## 94.மகிழ்ச்சி

எங்கே இருப்பதில்
எல்லையில்லா
சுதந்திரமும்
அமைதியும்
கிடைக்கிறதோ
அங்கே தங்கி விடுவதில்
மகிழ்ச்சி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 95.கவனமாயிருத்தல்

முகத்துக்கு நேரே
காரமாய்ப் பேசுபவரிடம்
ஒரு நேர்மை இருக்கும்
ஆனால்
பூசி மெழுகித் தன்னை மிகத் தாழ்த்தி
பூனை போல் பேசுவோரிடமே
கவனமாயிருத்தல் வேண்டும்!

## 96.இதயம் தெரியும்

ஒரு உண்மையைச் சொல்லிவிட்டு
உங்கள் முகத்தைக்
கண்ணாடியில் பாருங்கள்
இதயம் தெரியும்!

## 97.தூதுப் புறா

சேய்களைக் கடத்தி
சேர்ந்தே பசி தீர்த்து
சாய்த்திடும் தீயவர்க்கு
சாட்டையடி கொடுத்து
தேய்ந்திடும் மனிதத்தை
தேடியே அனுப்புவோம்
தூய்மையாய் தூதுப் புறா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 98.இறைவா அருளேன்

வேண்டுதல் வரமாய்
வேதனை ஒழிந்திட
சாண் வயிற்றுக்கு
சாப்பாடு கிடைத்திட
தீண்டாமை நீங்கி
தீயோர் தொலைந்திட
வேண்டும் இறைவா அருளேன்!

## 99.மதியோ

சேய்களுடன் ஒன்றாய்ச்
சேர்ந்திருக்க விரும்பும்
தாய்களுக்குத் தனிமை
தாங்காத வலி
காய்கள் கனியானதும்
காத்த மரத்துக்கு
நோய் தந்து போவது மதியோ?

## 100.புது வழிகள்

முடியாது என்று நினைத்தால்
முடியாது!
முடியும் என்று நினைத்த மாத்திரத்தில்
புது வழிகள் விரியும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 101.அழகு

உலகில் உயிர்கள் அழகு!-மனங்களில்
ஊடுருவும் அன்பும் அழகு!
ஏட்டுக் கல்வியும் அழகு ! - அதன்வழி
ஒழுகும் மனிதரும் அழகு !
கூடி வாழ்தல் அழகு!-குற்றமில்லாக்
கொள்கையில் நிலைத்தலும் அழகு!
தேடல் தேவைகள் அழகு!-தேடலில்
தோல்வி பொறுத்தல் அழகு!
நீண்ட ஆயுள் அழகு! - நேர்மையில்
நின்று நிலைத்தல் அழகு!
நாடும் நதியும் அழகு!-நலிவிலாக்
காடும் இயற்கையும் அழகு !

## 102.சக்தி

பேச்சில் ஒரு மின் சக்தி
பரவட்டும்!
கவிதையில் ஒரு காந்தம்
இருக்கட்டும்!

## 103.நிறை

மனம் என்பதே நிறை
அது குறையானவர்க்கு
ஏதும் நிறைவில்லை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 104.தேடி வருமோ

மனதுள் வக்கிரத்தையும்
கனமான வஞ்சத்தையும்
தனதாக்கி வைத்துக் கொண்டு
தினவிரதம் காப்பதால்
தேடி வருமோ இறை அருள்!

## 105.தடுக்கப்படுவதில்லை

நீதி பேசும் இடம்
நீதிமன்றம் என்று
நினைத்துக் கொண்டிருப்பதால்தான்
பொது இடங்களில்
அநீதி தடுக்கப்படுவதில்லை!

## 106.கண்கள்

அத்தனைபேரையும்
அன்போடு ஈர்த்திழுக்க
அந்தக் கண்கள்
போதுமாயிருக்கின்றன!

## 107.தவறுக்கு துணை

நண்பர் மீது தவறென்று தெரிந்தும்
மௌனமாகிக் கொண்டால் அது
தவறுக்கு துணை போவதற்கே ஒப்பாகும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 108.பொய்மை

ஒரு பொய்மை
உலகை வலம் வரும்போது
ஒன்பது கோடி
பொய்மைகளையும்
தோழிகளாக்கித்
தேரேறி வரும்!

## 109.திறந்தது

மலையில் மோதிக் குருவி
மயங்கிச் சாய்ந்தது மருவி
மலைமூலிகை அருந்தி
இமை திறந்தது வருந்தி

## 110.காதல்

யோசிப்பிலும்
யாசிப்பிலும்
வாசிக்கப்பட்டு
சுவாசிக்கப்பட்டது!

## 111.வீண்

பயனில்லா மாமலையும்
பக்கத்திருப்பதே
வீண்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 112.மனம்

பிறர்க்காய்
சிரமங்களைத்
தாங்கும் மனம்
மகிழ்வாய்த்தானிருக்கும்!

## 113.கவலை

நாம் சரியாக
நட ந்து கொண்டால்
பின்னே வருவோர்
பற்றிய கவலை
பற்றிக் கொள்ளாது!

## 114.தாக்கம்

மென்மையானவைக்கே
தாக்கம்!
வன்மையானவை
தாங்கும்!

## 115.மனிதம்

சாதிப்பெயரை
பின்னால் சேர்த்தபடி
மனிதம் பேசுகிறான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 116.யாது பயன்

இருக்கும்போது வாழ்த்தாதோர்
இல்லாதபோது
தேடித் தேடி
நன்மைகளையும்
நேர்மறைகளையும்
வாழ்த்தி யாது பயன் ?

## 117.கருவி

மனத்தூய்மையை
அளக்கும் கருவி
கண்டுபிடிக்கப்பட்டால்
கோவிலுக்குள்
குருவானவரும்
இருக்க முடியாது!

## 118.கவலையின்றி

யாருக்கு என்ன துன்பம்
வந்தாலும்
அது பற்றியெல்லாம்
கவலையின்றிக்
காதல் மட்டுமே
மலர்ந்து விடுகின்றது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 119.பெரியவர்

பெரியவர் என்பது
பேச்சு செயல் பண்பினால்
அறியப்படுமே ஒழிய
வயதினால் வருவதல்ல!

## 120.நோய்

நான் யார்மீதும்
காழ்ப்புணர்வு
கொண்டதில்லை!
ஆனால்
எல்லோர்க்குமே
என்மேல் வெறுப்பு!

## 121.பக்தன்

எத்தனை உருவம்
எடுத்தாலும்
பக்தன் மட்டுமே
கடவுளைக்
கண்டுபிடித்து விடுகிறான்!

## 122.களஞ்சியம்

மழலை பேசும் மொழியின்
புரிதல் களஞ்சியம்
தாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1௨3.கதைத் திறன்

கல்லில் பெண் சிலையை
ஆண் செதுக்கி விடுவது
கலைத் திறன்!
சொல்லில்
பெண்மையைச்
செதுக்குவதாய்ச் சொல்வது
கதைத் திறன்!

## 1௨4.யார் நீ?

நலமா என்றேன்
யார் நீ என்கிறாய்
மனிதன் என்கிறேன்
எப்போது விழித்தாய்
என்கிறாய்!

## 1௨5.உணர்

மனிதரை மதிக்கும்
மரியாதை பழகி
இதமான சொற்களை
இயல்பிலே பேசி
நிதமும் பயின்றால் நிச்சயம் சிறப்பு
முதலில் மனிதா உணர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 126.அவமதிப்புத்தான்

நல்ல விசயமாக
இருந்தால் கூட
அதன்
மதிப்புத் தெரியாத இடத்தில்
சொன்னால்
அவமதிப்புத்தான் கிடைக்கும்!

## 127.தூங்குவர்

நீங்கள் சொல்லுங்கள்
நீதியும் நியாயமும்
தாங்கி நடந்திட
தாய்போல் பலருண்டு
தீங் கிழைப்போர்
தீயதைப் பெற்றே
தூங்குவர் இறுதியில் தேர்!

## 128.மலரட்டும் மொட்டுக்கள்

உலகில் பலவும்
உயர்வாய் உலவ
கலகம் நீங்கிக்
களிப்பு மலர
பலம் பொருத்திப்
பகுத்தாய்ந்து வெல்ல
மலரட்டும் மொட்டுக்கள் இனி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 129.கரங் கொடுக்காமை

மரங்களை அழித்து
மனங்களை வருத்தி
அரண்களை அழிக்கும்
அறிவிலா வினையால்
இரங்கிப் பெய்யும்
இயற்கை மழையும்
கரங் கொடுக்காமை காண்!

## 130.பலகீனம்

படிக்காதவர் என்று
படிக்காமலே இருப்பதுவும்
புரியவில்லை என்று
புரியாமலே இருப்பதுவும்
பலகீனம்!

## 131.முள்மேல் வாழ்க்கை

பிள்ளைக் கனியமுதைப்
பிரியமுடன் பெற்றெடுத்து
அள்ளி அணைத்தலில்
அன்பைப் பிரித்தெடுத்து
உள்ளம் பிரிந்து
உறவை முறிக்கையில்
முள்மேல் வாழ்க்கைக்கு நேர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 132.தீனியாய்

அந்த மிருகம்
தூங்குவதில்லைப்போலும்
விழித்திருப்பதால்
பசித்திருக்கிறது
சமயம் கிடைக்கும் போது
சிவந்த விழிகளை உருட்டி
கோரப்பல்லால் கிழித்து
திரைமூடியிருந்தாலும்
நிர்வாணத்தை மட்டுமே
புசிக்க விழைகிறது
வயது வேறுபாடின்றிய
பெண்பாற்களே
நிரப்பபடும் தீனியாய்!

## 133.கொள்ளை

கீழே கிடந்த
கைத்தொலை பேசியை
உரியவரிடம் ஒப்படைக்க
மனதில்லாது
சட்டைப்பையுள்
மறைத்தவன்
வீட்டில் கொள்ளை
போயிருந்தன நகைகள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 134. நிராகரித்தல்

புதிய ஒன்றைப்பார்த்ததும்
பழைய ஒன்றை நிராகரித்தல்
பக்குவமில்லா மனிதர்க்கே
பொருந்தும்!

## 135. வலம் வரும்

உள்ளதை
உள்ளபடி சொல்வதற்கெல்லாம்
பயந்து கொண்டிருந்தால்
பொய்கள் பயமின்றித்தானே
வலம் வரும்!

## 136. மறைத்தாலும்

அன்பைப்
புதைத்தாலும்
மறைத்தாலும்
வெளிப்பட்டே தீரும்
விதைகள் முளைத்து
எழுவதைப் போல்!

## 137. போகாது

வந்தது காதல்தான் என்றால்
குந்தியிருக்கும் இதயத்தில்
விரட்டினாலும் போகாது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 138.கலைந்து போகிறது

பெண்கள் தலை நிமிர்த்த
ஆரம்பித்து விட்டார்கள்
அவர்கள் கண்களின் சக்திக்குத்
தாக்குப்பிடிக்க இயலாமல்
கலைந்து போகிறது
அடிமைத்தன மின்னல்!

## 139.செவிமடுத்தல்

சொல்லும் விதம்
கடுமையாகத் தெரியலாம்
சொல்லின் பொருள்
கொடுமையானதாகத்
தெரியாவிட்டால்
செவிமடுத்தல் செம்மை!

## 140.நோக்கம்

மனது வருந்தட்டும் என்பதல்ல
மனம் திருந்தட்டும் என்பதே
சில வார்த்தைகளின் நோக்கம்!

## 141.தாயம்

வாழ்வு மாயம் அல்ல
அது தாயம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 142.வேதனை

பெற்றோர் பிரிவு தொடர்புடைய
இருவரையும் வருத்தலாம்
குழந்தைகளையும் வருத்துவதுதான் வேதனை!

## 143.விதைத்தல்

கதைகேட்டுக்
காலம் போக்காமல்
சிதைக்குள் சேருமுன்னே
சிலபயனை விதைகளே
விதைத்தல் சிறப்பே!

## 144.விழிப்பேற்றும்

சூடேற்றிச் சாயம் இழைத்து
இனிமை குழைத்து
சுவை கூட்ட உறிஞ்சப்பட்டவை
நரம்புகளை விழிப்பேற்றும்!

## 145.பிரிந்தாலும்

பிரிந்தாலும்
மறக்காமலிருப்பது
என்பது அகத்தின் அழகு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 146.பலம்

தேடலில் சோர்ந்துதான் போகிறோம்
ஆயினும்
கிடைக்கும் என்னும் நம்பிக்கை
மிகப் பெரிய பலம்!

## 147.சிக்கல்

சிக்கலை
ஒருநாள் இல்லாவிட்டாலும்
ஒருநாள் சொல்லித்தானே ஆகவேண்டும்!

## 148.தெரியாதவர்

எல்லாவற்றுக்குமே
சிரித்துக் கொண்டிருப்பவர்
சிந்திக்கத் தெரியாதவர்!

## 149.அடங்காது

பணிதல் என்பது பண்பு
அடிமைத்தனத்துள் அடங்காது!

## 150.மனப்பாங்கு

நீ யாரா இருந்தா எனக்கென்ன
என்னும் மனப்பாங்கு
சமூக அக்கறையற்றோர்க்கே
உரியதாகும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 151.நன்மையே

இன்பத்திலும் துன்பத்திலும்
பங்கெடுக்கார்
தன் தேவைக்கு தயங்காது
பங்கு கேட்பார்
இவர் உறவினை ஓரங்கட்டியே
ஒழுகுதல் நன்மையே உண்மையே!

## 152.ஏது பயன்?

தீயதுக்கு காரணம் கண்கள்!
அதை மட்டும்
நன்கு திறந்து வைத்துக் கொண்டு
மீதியை மூடி ஏது பயன்!

## 153.வலிமை

வெறும் எண்ணிக்கையில்
தீர்மானிக்கப்படுவதில்லை வலிமை!
செயற்பாட்டுத் திறனின்
அடிப்படையில்தான் வெற்றி!

## 154.ஆசிரியர்

ஒவ்வொருவரிடமும்
ஏதோ ஒருபாடம் கற்பதால்
எல்லோருமே ஆசிரியர்தான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 155.நிலைக்குமா

அரையும் குறையுமாய்
தெரிந்ததை வைத்துக் கொண்டு
கோபுரம் கட்டலாம்
நிலைக்குமா என்பதே
சந்தேகம்!

## 156.ஈர்ப்பு

என்னவோ ஒன்று
ஏதோ ஒன்று
ஈர்த்துவிடுதலால்
திரும்பிப் பார்த்துவிட
வைத்து விடுகிறது!

## 157.கூடா நட்பு

எந்த நட்பை
மறைக்கிறீர்களோ
அது கூடா நட்பு
என்றும் பொருள்!

## 158.இல்லாவிடில்

புன்னகை அழகுதான்
புதைப்பில் அழுகை இல்லாவிடில்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 159.வலிக்கின்றது

உலகம் முழுவதும் அராஜகம்
நமக்கு வந்தபோது மட்டும் தான்
வலிக்கின்றது!

## 160.அலைகின்றனர்

எலும்புக்காக அலையும்
பிராணியைப் போல்
சிலர் சண்டைக்கு
அலைகின்றனர்!

## 161.ஆராய்ச்சி

சற்று நேரம்
இமை மூடாமல்
அமைதி காத்து
அடுத்தவர் பணிகளைக் கவனித்தால்தான்
நாம் என்ன செய்துகொண்டிருந்தோம்
என்ற ஆராய்ச்சியே வருகிறது!

## 162.முடியாது

எதை இழந்ததற்காக
நாம் வருந்தப்போவதில்லையோ
அதைப் பெற்ற போதும்
மகிழ்ந்திருக்க முடியாது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 163.தெரிந்தது போல்

சரியாகத் தெரியாத ஒன்றை
தெரிந்தது போல்
பேசிவிட வேண்டாம்!
பேசிவிட்டுத் தெளிவடைந்தபின்
அந்த முகத்தை
எங்கே கொண்டே
வைக்க முடியும்!?

## 164.தவறு

காதலிப்பது தவறல்ல
காதலித்த பின் நிலையாமை!
தவறு!

## 165.எச்சரிக்கை

கண்ணுக்கு நேரே
முகத்தைப் பார்த்து
கடுகடுப்பாய்
பேசுபவரை நம்பலாம்
காரியத்தைச் சாதிக்கக்
கொஞ்சிக் கொஞ்சிப் பேசும்
காதாரிகளிடமே
எச்சரிக்கை தேவை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 166.ஒழுங்கு படுத்துதல்

தலை முடியைப் பின்னிக்கொண்டே
யாரும் பிறக்கவில்லை!
பின்னர் பின்னுவதும்
பறக்கவிடுதலும்
அவரவர் வசதிக்கு ஏற்ப
ஒழுங்கு படுத்துதலே ஆகும்!

## 167.பொதுவாய் சொல்லுங்கள்

பணிவிடைகளை
எதிர்பார்க்காமல் முடிந்தவரை
சுயமாய்த் தேவைகளை
நிறைவேற்றினால்
சமாதானம் மேலோங்கும்!
ஆணென்ன பெண்ணென்ன
அடிமை இல்லை!
அன்பால் தானே செய்வது வேறு
கட்டளை போட்டு
செய்யச் சொல்வது வேறு!
புத்திமதி சொல்வதென்றால்
பொதுவாய்ச் சொல்லுங்கள்!

## 168.எதிர்பார்ப்பதில்லை

வான் மழை வாழ்த்தையோ
விமர்சனத்தையோ எதிர்பார்ப்பதில்லை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 169.கடவுள் தன்மை

முதலில் மனித இயல்புகளோடே
இருப்பதற்கானவற்றை
முறைப்படுத்துவோம்
அதன் நிறைவில்
கடவுள் தன்மை தானே
உருப்பெறும்!

## 170.நினைத்தால்

சமூகத்தின் களைகள்
எல்லாவற்றையும்
அகற்றிவிட தனிமனிதனால்
முடியாதுதான்.
கண்ணால் கண்ட
களைகளையாவது
அகற்றிச் செல்வோம்!
வில் என்று நினைத்தால்
வெல்வது களைகள்!

## 171.ஆர்வக் கோளாறு

பங்கேற்பவன்
சங்கடமில்லாமல் இருக்கிறான்
பார்வையாளனே
ஆர்வக் கோளாறில் குதிக்கிறான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 172.தனிமை

சிறு சிறு தவறுகளுக்காக
எல்லாரையும் வெறுத்து விட்டால்
தனிமை ஒன்றே
துணையாய் இருக்கும்!

## 173.நல் வார்த்தை

நல் வார்த்தை உலா
நெஞ்சினிக்கும் பலா
உறுதி தரும் விலா
உலகத்திற்கு நிலா!

## 174.இடையூறு

வினாக்களை எழுப்புபவரையும்
நடைமுறை பேசுபவரையும்
பிடித்துப் போவதில்லை
நோக்கத்துக்கு
இடையூறென்பதால்!

## 175.இலகல்ல

நாம் மனதுக்குள்
நினைத்த வடிவத்தை
பிறர் உருவாக்கித் தருவதென்பது
இலகல்ல!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 176.நம் கையில்

யார் குற்றினாலும் என்ன
அரிசி வரட்டும்
சோறாக்குவதா இல்லையா என்பது
நம் கையில்!

## 177.வழி

எப்போதும்
பேசும் நான்
மௌனமாக இருக்க
நினைக்கும்போது
நீ பேசிவிடுவதால்
சமாதானத்துக்கு
வழியே இருப்பதில்லை!

## 178.தலையாட்டி

நீங்கள் சொல்வது
எல்லாவற்றுக்குமே
தலையாட்டினால்தான்
அன்பு காட்டுவீர்கள் எனின்
உங்கள்
அன்புக்குரியன
தஞ்சாவூர் பொம்மைகள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 179.மகிழ்ச்சி

மகிழ்ச்சி என்பது
என்ன தெரியுமா
நாம் நாமாகவே
இருப்பதுதான்!

## 180.தனித்தன்மை

தடைகளை முறியடித்து
செய்யும் செயல்களில்
தனித்தன்மை இருக்கும்!

## 181.ஆகாது

அடுத்த வீட்டை
எட்டிப்பார்ப்பதே தவறு
அங்கே நடக்காததையும்
நடந்ததாய் விபரிப்பது
அதைவிடத் தவறு
எட்டிப்பார்ப்பவருக்குத்
தெரிந்திருக்க வேண்டும்
இன்னொருவர் தன்
வீட்டையும் எட்டிப்பார்த்துக்
கதையளப்பார் என்பது
வீண்கதை விடியலுக்கு ஆகாது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 18௨.பொக்கிஷம்

தவறென்று அறிந்த பின்
திருத்திக் கொள்பவர்
பொக்கிஷம்!
தெரிந்தும் மாறாதவர்
விஷம்!

## 18௩.மனிதனாகு

முதலில் நீ மனிதனாகு
பின் மனிதம் பேசு!

## 184.அழியும்

ஆராயாமல் கூறப்படும்
குற்றச்சாட்டுகளால்
அழிந்து போவது
அன்பு மட்டுமல்ல
ஆர்வமும்தான்!

## 185.வேண்டுதல்

சாத்தானின் வேண்டுதலுக்குச்
செவி சாய்ப்பதில்லை
கடவுள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 186.வந்துபார் தெரியும்

ஒரு வட்டமிட்டு
அதனுள் வாழ்ந்திருந்து
உலகினைக் காணாத மனிதா!
உன் வட்டத்து வாழ்வைவிடச்
சிறந்ததும் உண்டு
வந்து பார் வெளியே தெரியும்!

## 187.உழைப்பு

முறையற்ற கடின உழைப்போ
பொறுமையைத்தான் தின்னும்
திறமை கொண்ட
உழைப்பு மட்டுமே
திக்கெட்டும் வெற்றி தரும்!

## 188.சுயநலம்

சுயநலமில்லா மனிதரும்
இல்லை!
சுயநலம் மட்டுமே மனிதமும்
இல்லை!

## 189.நடத்தை

அழகற்ற நடத்தையை
அழித்தால்தான்
அழகாகும் வாழ்க்கை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 190.வார்த்தை

வெறும் வார்த்தைகளால்
வார்க்கப்படும் அன்புகூட
வெங்கூட்டி
வாழவைத்து விடும்!

## 191.வேலி

பாதுகாப்பு வேலிகள்
தங்கத்தில் அமைய
வேண்டியதில்லை!

## 192.படிகள்

தாழ்விலிருந்து நோக்கினால்
உயர்வைக்காட்டும்
உயர்விலிருந்து நோக்கினால்
தாழ்வைக் காட்டும்!
உயர்வும் தாழ்வும்
நம் எண்ணப்படி!

## 193.அறிதல்

நஞ்சின் கொடுமை
அறியும்வரை
நல்ல பாம்பும்
நட்பேயாகும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 194.நினைத்தால்

அடக்க நினைத்தால் கோபத்தையும்
ஆள நினைத்தால் அன்பையும்
இழக்க நினைத்தால் பேராசையையும்
ஈட்ட நினைத்தால் புண்ணியத்தையும்
உணர நினைத்தால் மனிதத்தையும்
ஊக்குவிக்க நினைத்தால் திறமையையும்
எழுப்ப நினைத்தால் வீரத்தையும்
ஏற்ற நினைத்தால் பெரியோரையும்
ஒழுக நினைத்தால் நல்லொழுக்கத்தையும்
ஓத நினைத்தால் பகுத்தறிவையும்
ஔடதமாய் அருந்தி வாழ்வோம்!

## 195.தேடல்

நீலிக்கண்ணீர்
போலிப்புன்னகை
நிறைந்து உறையும் உலகினிலே
நெஞ்சம் தேடித்தேடி
நிதமும் அலைவது
வஞ்சமில்லாப் புன்னகையே!

## 196.அன்பின் வழி

அறிந்த சில விடையங்களையாவது
பகிர்ந்து கொள்ளும் பக்குவமே
அன்பின் வழிதான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 197.சுயநலம்

குப்பைக் கிடங்கில்
குழறி அழும் குழந்தையின் குரல்
சுயநலத்தின் வெளிப்பாடு!

## 198.இடம்

அழகாக இருக்கிறதே என்று
அத்தனை பொருள்
வாங்கி வந்து அலங்கரித்தேன்!
நான் செய்த பொருள் வைக்க
இடமின்றிப் போச்சே!

## 199.சுடர்

இதழ் பிரியாமல்
இதயத்தின் சுடர்கள்
ஏற்றப்படுவதில்லை!

## 200.தாய்மை

குழந்தை முகம் பார்த்த கணத்தில்
வலிகள் மறைந்து
மலர்ந்துவிடும் அதிசயம்
தாய்மை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ் மண்ணில் பிறந்து
தமிழின் சொந்தமானேன்.
மதுரையில் தமிழின்
சிறப்பைக் கற்று
சொர்க்கம் கண்டேன்.
வாழும் சுவிஸ் மண்ணில்
தமிழ் வாழச் செய்வேன்.
இனி வாழும் வரை
எழுத்துலகில் ஆழ்ந்திருப்பேன்.
"இதயத்தின் சிலிர்ப்புகள்"
எனது முதல் தனிநூல்
என்பதில் பெருமையடைகிறேன்.

இதயச் சிலிர்ப்புடன்,
மகிழினி காந்தன்
**M.A., B.Ed.,**
தமிழாசிரியை

காகிதம் பதிப்பகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org